**வடக்கு வீதி புனரமைப்புச் செயற்திட்டம் (முல்லைத்தீவு – கொக்கிளாய் – புல்மோட்டை வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம்) - 2014**

---

வடக்கு வீதி புனரமைப்பிற்கான செயற்திட்டத்தின் (முல்லைத்தீவு–கொக்கிளாய்–புல்மோட்டை வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 செப்தெம்பர் 09 ஆந் திகதிய பீஎல்ஏ- 201005 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. முல்லைத்தீவு – கொக்கிளாய் –புல்மோட்டை வீதிகளின் 42.4 கிலோமீற்றர்கள் நீள வீதியை புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதி ஐ.அ.டொலர் 50.3 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 42.8 மில்லியன் அல்லது 85 சதவீதம் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2010 திசெம்பர் 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆகஸ்ட் 14 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. முல்லைத்தீவு–கொக்கிளாய்–புல்மோட்டை வீதியின் புனரமைப்பு வேலைகள் 2013 ஆகஸ்ட் 13 இல் பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டமானது வேறு வீதிகளை புனரமைப்பதற்கு அதன் செயற்பாடுகளை தொடர்ந்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள்

அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசாா் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆலோசனை மற்றும் சிவில் வேலைகள் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட நிதியத்தில் ஒப்பந்தக்காரர் மற்றும் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள், உபகரணங்கள் தளபாடங்கள் போன்ற சொத்துக்கள் செயற்திட்டத்தின் சொத்துக்களாக உள்ளது. எனினும், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசனையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதிகள் தனியாக அடையாளங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக பூர்த்திசெய்யப்பட்ட சிவில் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 1.21 மில்லியன் தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேந்தலைக் கிரயத்தின் அறவீடாக செயற்திட்டத்தால் செலுத்தப்பப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 8.6 ஆம் பிரிவின் பிரகாரம் இணங்காத போதும் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தருக்கு ரூபா 171,734 ஆன மிகையூதியங்கள் மற்றும் மருத்துவப் படிகளின் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையிலும் மேற்படி சந்தரப்பங்கள் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அத்தகைய சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டின் போதும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தொடரப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2014 திசெம்பர் 31 வரையும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2014 ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி | 42.80 | 5,777 | 10.25 | 1,342.2 | 41.05 | 5,315.2 |
| இலங்கை அரசாங்கம் | 7.50 | 1,059 | 0.11 | 14.8 | 7.54 | 972.8 |
| | 50.30 | 6,836 | 10.36 | 1,357.0 | 48.59 | 6,288.0 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

முல்லைத்தீவு – கொக்கிளாய் – புல்மோட்டை வீதியின் 42.4 கிலோமீற்றர்கள் நீளமான வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் 2013 ஆகஸ்ட் 13 இல் பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், மூல வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத நாயாறு மற்றும் அலம்பிலிலுள்ள பாலங்களின் நிர்மாண வேலைகள், முல்லைத்தீவிலுள்ள உள்ளக வீதிகளின் புனரமைப்பு மற்றும் புதுக்குடியிருப்பு – ஒட்டிசுட்டான் மற்றும் பதவியா – சிறிபுர வீதிகளின் புனரமைப்பு என்பன 2013 இல் ரூபா 116.79 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக கொஹோம்வஹசஹன்டிய இலிருந்து நெலும்வெவ வரையிலான 19.8 கிலோமீற்றர் நீளமான மாகாண வீதிகளின் புனரமைப்பிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 824.31 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த மேலதிக வேலைகள் பிரதான வேலைகளுக்கான முரண்களாக கருதப்பட்டிருந்தபோதிலும் உரிய தரப்பினர்களிடமிருந்து அத்தகைய வேலைகளுக்கான அனுமதிகள் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அளவீட்டுப் பட்டியலின் பிரகாரம் முல்லைத்தீவு – கொக்கிளாய் – புல்மோட்டை வீதியின் நடைபாதைகளின் 42.4 கிலோமீற்றர்களின் மீள்நிர்மாணத்திற்காக ரூபா 2,019 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2013 ஓகஸ்ட் 13 இல் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி இடைக்கால கொடுப்பனவு சான்றிதழின் பிரகாரம் அதன் மீது ரூபா 367.75 மில்லியன் தொகை மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளர் வேலைகளின் எல்லையானது இரட்டை தார் மேற்பரப்பு சிகிச்சையிலிருந்து மதிப்பீட்டு அடிப்படை படிப்பிற்கு மாற்றப்பட்டிருந்ததாகவும் அதன் விளைவாக சேமிப்புக்கள் மேற்கொள்ள முடிந்திருந்தது என விளக்கம் கொடுத்தார் எனினும், ஆரம்ப முற்பணங்கள் அதன் மீதான நம்பத்தகாத கிரய மதிப்பீடுகள் மற்றும் அதன் பிரதான மேலதிக கொடுப்பனவுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த நிபந்தனையின் 13.6 ஆம் உட்கூறின் பிரகாரம், முரண்களானது சிறிய அல்லது தற்செயலான தன்மை அடிப்படையிலான வேலைகளுக்காக நாள் வேலை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதன் மீது அளவீட்டுப்பட்டியலில் ரூபா 9 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரால் சமர்ப்பிக்கப்பட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 16 மில்லியன் பெறுமதியான வேலைகளின் முரண்கள் கோரப்பட்டிருந்தது. மேலும் அத்தகைய வேலைகளில் பல சிறிய அல்லது தற்செயலான தன்மையில் இல்லையெனவும் அத்தகைய முரண்களுக்காக சாதாரண முரண் கட்டளைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லையெனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 17+000 கிலோமீற்றர் தொடக்கம் 19+000 கிலோமீற்றர் வரையான கொஹொம்பகஹஸ்கன்தியாவிலிருந்து நெலும்வெவ வீதி வரையான விளிம்புகளில் பல வெடிப்புக்களும் தேசங்களும் இருந்ததென பௌதிகரீதியான அவதானிப்பின் போது அவதானிக்கப்பட்டன. ஆகையால் வீதியின் புனரமைப்பு

வேலைகளின் தரம் போதியளவில் உறுதிப்படுத்தப்படவில்லையென வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4 சர்ச்சையான தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து செயற்திட்டமானது ரூபா 2.74 மில்லியன் தொகையான விஷேட கடனை பெற்றிருந்தது. எனினும், செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2014 யூன் 27 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அந்த கடனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.